அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 6
மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு மார்ச் –2020
விலங்கியல் விடைக்குறிப்புகள் (புதிய பாடத்திட்டம்)

குறிப்பு –

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. விடைக் குறியீடு அல்லது விடை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தவறாக இருப்பின், அதற்கு 0 மதிப்பெண் மட்டுமே வழங்க வேண்டும்.

மொத்த மதிப்பெண் : 70

பகுதி– I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 15 X1= 15

| A–வகை | | | B–வகை | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆ | தாமிரம் | 1 | அ | SCID |
| 2 | அ | கருகண்காணிப்பு கருவி | 2 | ஆ | ஜேகப், மோனாட் |
| 3 | இ | இடியோனெல்லா சாக்கையன்சிஸ் | 3 | அ | $I^AI^0$(ம) $I^BI^O$ |
| 4 | ஈ | பிளாஸ்மா செல்கள் | 4 | ஈ | (A)மற்றும் (R) சரி (R) என்பது (A)ன் சரியான விளக்கம் |
| 5 | இ | ஏமெனோரியா – மாதவிடாய் இல்லாதிருத்தல் | 5 | இ | (i)சரி (ii)தவறு (iii)சரி (iv)தவறு |
| 6 | ஆ | ஜேகப் மற்றும் மோனாடு | 6 | இ | இடியோனெல்லா சாக்கையன்சிஸ் |
| 7 | ஈ | (A)மற்றும் (R) சரி (R) என்பது (A)ன் சரியான விளக்கம் | 7 | இ | குரோமோசோம் 19 |
| 8 | இ | குரோமோசோம் 19 | 8 | அ | கருகண்காணிப்பு கருவி |
| 9 | அ | SCID | 9 | ஈ | பிளாஸ்மா செல்கள் |
| 10 | இ | (i)சரி (ii)தவறு (iii)சரி (iv)தவறு | 10 | ஆ | தாமிரம் |
| 11 | ஈ | விலங்கியல் பூங்காக்கள் | 11 | இ | ஏமெனோரியா – மாதவிடாய் இல்லாதிருத்தல் |
| 12 | ஈ | மொழுக்கு ஈ | 12 | இ | கருப்பு மான், இந்திய வால் பல்லிகள், வெள்ளை கால் நரி |
| 13 | ஆ | உயிரினங்கள் தேர்வு செய்து கலவியில் ஈடுபடும் போது | 13 | ஈ | விலங்கியல் பூங்காக்கள் |
| 14 | இ | கருப்புமான், இந்தியமுள் வால் பல்லிகள், வெள்ளை கால் நரி | 14 | ஈ | மொழுக்கு ஈ |
| 15 | அ | $I^AI^0$(ம) $I^BI^O$ | 15 | ஆ | உயிரினங்கள் தேர்வு செய்து கலவியில் ஈடுபடும் போது |

## பகுதி– II

**எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி** 6x2=12

**வினா எண்.24–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| | | |
|---|---|---|
| 16 | சீம்பால்<br>குழந்தை பெற்றவுடன் தாயின் உடலில் உற்பத்தியாகும் மஞ்சள் நிற பால் சீம்பால் எனப்படும்<br>முக்கியத்துவம் (ஏதேனும் ஒரு குறிப்பு )<br>1. நோய் எதிர்ப்பு பொருள் கொண்ட வளர்ச்சி மற்றும் திசு பழுது நீக்கம் செய்யும் காரணிகள் உள்ளன.<br>2. இயற்கை நுண்ணுயிர் எதிர் காரணியாகச் செயல்பட்டு நோய் எதிர்ப்பு தன்மையை தூண்டுகிறது.<br>3. சீம்பாலில் லாக்டோஸ் குறைவாக உள்ளது. கொழுப்பு கிடையாது.<br>4. இதில் அதிக புரதம், வைட்டமின் A, தாது உப்புகளும் உள்ளன.<br>5. அதிகளவு IgA வகை எதிர் பொருட்கள் காணப்படுகின்றன. இது குழந்தையின் உணவு பாதையில் ஏற்படும் பாக்டீரியத் தொற்றை தடுக்கிறது. | 1<br><br>1 |
| 17 | தாய் சேய் இணைப்பு திசு மனித கோரியானிக் கொனடோட்ராபின், மனித பிளாசன்டல் லாக்டோஜென் போன்ற ஹார்மோன்களை சுரப்பதால், இது ஒரு நாளமில்லா சுரப்பி என அழைக்கப்படுகிறது. | 2 |
| 18 | ஹண்டிங்டன் கோரியா<br>மனித உடற் குரோமோசோம் ஓங்கு தன்மை கொல்லி மரபணு நோய் | 2 |
| 19 | குவி பரிணாமம் விரி பரிணாமம் வேறுபாடு | |

| குவி பரிணாமம் | விரி பரிணாமம் | |
|---|---|---|
| அமைப்பு அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் ஒரே விதமான செயலை செய்ய கூடிய உறுப்புகள் செயலொத்த உறுப்புகள் எனப்படும். இவை குவி பரிணாமத்திற்கு வழிவகுக்கும். | உருவாக்கத்தில் ஒரே மாதிரி அமைந்து வெவ்வேறுசெயல்களை செய்யக் கூடிய உறுப்புகள் அமைப்பொத்த உறுப்புகள் எனப்படும் இவை விரி பரிணாமத்தை ஏற்படுத்தும். | 1 |
| எ.கா.ஏதேனும் ஒன்று<br>1. பறவைகள் மற்றும் பூச்சிகள் இறக்கைகள்<br>2. பாலூட்டி ஆக்டோபஸ் கண்கள்<br>3. பென்குவின் – டால்பின் – தசையாலான அகல எலும்புகள்<br>4. கிழங்கு பேர் மாற்றுரு – உருளை தண்யாற்றி | எ.கா. ஏதேனும் ஒன்று<br>1. நிலவாழ் முதுகெலும்பிகளின் முன்னங்கால்கள்<br>2. காகித பூ முட்கள்<br>3. சுரை(ம) பட்டாணி பற்று கம்பிகள் | 1 |

| | | |
|---|---|---|
| 20 | செல்லியல் தனிமைப்படுத்துதல்<br>இரு வேறு சிற்றினத்தை சேர்ந்த உயிர்களின் ஆண்(ம) பெண் இனச்செல்களின் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை வேறுபாட்டின் காரணமாக கருவுறுதல் நிகழ்வதில்லை | 2 |
| 21 | வேதிய நடுவர்களின் – உடற்செயலியல் தடைகள்<br>1. லைசோசைம் பாக்டீரிய எதிர்ப்புக் காரணியாகச் செயல்பட்டு செல்சுவரை தகர்க்கின்றன.<br>2. இன்டர்பெரான்கள் தொற்றில்லா செல்களில் வைரஸ் எதிர்பை தூண்டுதல்<br>3. வெள்ளையணுக்களால் உருவாக்கப்படும் நிரப்பு பொருட்கள் நுண்கிருமிகளை சிதைத்தல் (அ) செல் விழுங்குதலை எளிதாக்குகின்றன | 2 |
| 22 | இயற்கை வேளாண்மையின் முக்கிய பண்புகள்<br>1. கரிம பொருட்கள் பயன்பாடு மண்ணின் தரத்தை பாதுகாத்தல் உயிரிய செயல்பாடுகளை ஊக்குவித்தல்<br>2. மண் வாழ் நுண்ணுயிர்கள் – மறைமுகமாக பயிர்களுக்கு ஊட்டச்சத்துகளை அளித்தல்<br>3. பயறு வகை தாவரங்களைப் பயன்படுத்தி மண்ணில் நைட்ரஜனை நிலைப்படுத்துதல்.<br>4. பயிர் சுழற்சி – இயற்கை கொன்றுண்ணி இயற்கை உரங்கள் வேதிய வெப்ப (ம) உயிரிய முறைகளில் களை மற்றும் தீங்குயிரிகளை கட்டுபடுத்துதல் | 2 |
| 23 | சிவப்பு பட்டியல் – எட்டு வகை சிற்றினங்கள்<br>1. மரபற்று போனவை 2. வனத்தில் மரபற்று போனவை<br>3. மிகவும் ஆபத்தான நிலையிலுள்ளது. 4. அழியும் நிலையிலுள்ளவை<br>5. எளிதில் பாதிக்க கூடியவை<br>6. குறைந்த ஆபத்தையுடையவை 7. முழுமையான தகவலிலாதவை 8. மதிப்பீடு செய்யப்படாதவை. | 8 X¼ = 2 |
| 24 | நீர் மாசுபாட்டினை தடுத்தல் (ஏதேனும் 2)<br>1) மாசுபடுத்திகளை உற்பத்தி ஆகும் இடத்திலேயே முறைப்படுத்துதல் (அ) தடுத்தல்<br>2) நகராட்சி கழிவுகள் வெளியேற்றும் முன் அறிவியல் முறைப்படி சுத்திகரித்தல்<br>3) கழிவு நீர் (ம) தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுதல்<br>4) செயற்கை உரங்கள் (ம) நீங்குயிர் கொல்லிகளின் பயன்பாட்டை கட்டுப்படுத்துதல்<br>5) பொதுமக்களின் விழிப்புணர்வு (ம) ஈடுபாடு | 2 |

## பகுதி– III

**எவையேனும் 6 வினாக்களுக்கு விடையளி** 6x3=18

**வினா எண்.33–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்**

| | | |
|---|---|---|
| 25 | இழப்பு மீட்டல்<br>காயமடைந்த உடல் பகுதிகளிலிருந்து உடல் பாகங்கள் அல்லது திசுக்கள் மறுவளர்ச்சி அடைதல்<br>வகைகள்<br>1. முழு உருவ மீட்பு<br>உடலின் ஒரு சிறிய துண்டுப்பகுதியிலிருந்து முழு உடலும் மீண்டும் வளர்கிறது.<br>எ.கா. ஹைட்ரா (அ) பிளனேரியா<br>2. உறுப்பு மீட்பு<br>இழந்த உடலுறுப்புகளை மீண்டும் உருவாக்கி கொள்ளும் திறன்.<br>இருவகைகள்<br>1. சீராக்கல் – சேதமடைந்த சில திசுக்கள் மட்டும் சரி செய்யப்படுதல்<br>2. மீண்டும் உருவாக்குதல்<br>உடல் இழந்த அல்லது வெட்டப்பட்ட பகுதியை மீண்டும் உருவாக்குதல் எ.கா.நட்சத்திர மீன் – சுவர் பல்லி வால் | 1<br><br>1<br><br>1 |
| 26 | வைரஸ் பால்வினை தொற்றுகள்<br>வைரஸ் பால்வினை தொற்றுகளில் ஏதேனும் மூன்றின் பெயர்கள் மற்றும் அதன் அறிகுறிகள்<br>மூன்று பெயர்கள்<br>மூன்று அறிகுறிகள் (ஏதேனும் 3 – பிறப்பு உறுப்பு அக்கி, பிறப்பு உறுப்பு மருக்கள், கல்லீரல் அழற்சி, எய்ட்ஸ்) | 1 ½<br><br>1 ½ |
| 27 | மனித மரபணு திட்டத்தின் முக்கிய இலக்குகள் (ஏதேனும் 3)<br>1. மனித DNAவிலுள்ள அனைத்து – 30,000 மரபணுக்களையும் கண்டறிதல்<br>2. மனித DNAவின் 3 பில்லியன் கார இணைகளின் வரிசையை தீர்மானித்தல்<br>3. இத்தகவல்களை தரவு தளங்களில் சேமித்தல்<br>4. தரவுகளை ஆய்வு செய்வதற்கான கருவிகளை மேம்படுத்துதல்<br>5. இந்த தொழில் நுட்பங்களை தொழிற்சாலை போன்ற துறைகளுக்கு இடம் மாற்றுதல்<br>6. இத்திட்டத்தில் எழும் அறம், சட்டம் (ம) சமூகம் இடர்பாடுகளை தெரிவித்தல் | 3 |

| | | | |
|---|---|---|---|
| 28 | பேசில்லரி சீதபேதி – அமிபீக் சீதபேதி ஒப்பீடு | | |
| | **பேசில்லரி சீதபேதி** | **அமிபிக் சீதபேதி** | |
| | <u>நோய்க்காரணி</u><br>ஷிஜெல்லா சிற்றினம் | எண்டமீபா ஹிஸ்டோலைடிகா | 1 |
| | <u>நோய்தொற்றும் பகுதி</u><br><u>பரவும்முறை</u><br>மலக்கழிவு கலந்த உணவு<br>(ம) நீர் வயிற்றுவலி நீரிழப்பு<br>மலக்கழிவில் இரத்தம் (ம)<br>கோழை காணப்படுதல் | பெருங்குடல் சுவர் மலக்கழிவு கலந்த<br>உணவு (ம) நீர் கடத்தி குடற்புண் வீட்டு ஈ<br>இரத்த கசிவு<br>வயிற்றுவலி அதிக கோழையுடன் கூடி<br>மலக்கழிவு | ½<br>½<br>1 |
| 29 | உதவி மற்றும் வாழ்க்கை – வரையறை<br>இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சிற்றினங்கள் உணவிற்காக இணைந்து வாழ்தல். இவற்றில் ஒரு உயிரி நன்மை அடைகிறது, மற்றொரு உயிரி நன்மையோ தீமையோ அடைவதில்லை<br>எ.காட்டுகள் ஏதேனும் ஒன்று<br>1. திமிங்கில உடலில் ஒட்டியுள்ள பர்னக்கிள்கள்<br>2. ஏக்ரட் (கொக்குகள்) மற்றும் கால் நடைகள் | | 1½<br>1½ |
| 30 | கிரை ஜீன்கள் – பங்கு<br>• ஸ்போர்கள் உற்பத்தியின் போது டெல்டா எண்டோடாக்சின் (Delta endotoxin) என்ற படிக புரதத்தினை பேசில்லஸ் துரிஞ்சியன்சிஸ் உருவாக்குகிறது.<br>• இது கிரை ஜீன் (Cry gene) மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. லெபிடாப்டீரா, டிப்டிரா, கோலியாப்டிரா மற்றும் ஹைமனாப்டிரா போன்ற வரிசைகளைச் சேர்ந்த பூச்சியினங்களுக்கு எதிராக டெல்டா எண்டோடாக்சின் வினை புரிய வல்லது.<br>• இவ்வகைப் பூச்சிகள் இந்த நச்சுப் பொருட்களை உட்கொள்ளும்போது காரத்தன்மையுள்ள செரிமான மண்டலம் கறையாத படிகப் புரதத்தினை கரையும் புரதமாக மாற்றுகிறது.<br>• இந்த நச்சு குடல் செல்லுக்குள் புகுந்து குடலிபக்கத்தை செயலிழக்கச் செய்கிறது.<br>• இதனால் உண்ணுவதை நிறுத்தும்ட பூச்சிகள் பட்டினியால் இறக்கின்றன.<br>• அறிவியல் அறிஞர்கள் நச்சினைத் தோற்றுவிக்கும் ஜீனை தாவரங்களில் செலுத்தி பூச்சி எதிர்ப்புத் தன்மை கொண்ட தாவரங்களை உருவாக்கியுள்ளனர்.<br>எ.கா.Bt, பருத்தி | | 6X½=3 |
| 31 | மரபியல்பு மாற்றப்பட்ட உயிரிகளால் ஏற்படும் விளைவுகள் (ஏதேனும் 3)<br>• இலக்கில் இல்லாச் சிற்றினங்களான மண்ணில் வாழும் உயிரிகள், தீங்கு செய்யத் தாவரங்கள், பறவைகள் மற்றும் பிற விலங்குகளுக்கு ஊறு விளைவித்தல் | | 3 |

| | | |
|---|---|---|
| | • ஜீவசாயஃ வேளாண் சூழ்நிலை மண்டலம் உட்பட்ட உயிரிய சமுதாயத்திற்கு இடையூறு செய்தல்.<br>• சிற்றின பல்வகைத் தன்மை அல்லது சிற்றினங்களுக்குள்ளான மரபியல் பல்வகைமை ஆகியவற்றில் சரி செய்யப்பட இயலாத இழப்பு அல்லது மாற்றங்களை ஏற்படுத்துதல்.<br>• மனித நலனுக்கு எதிரான இடர்பாடுகளை ஏற்படுத்துதல்<br>• மரபியல்பு மாற்றப்பட்ட உயிரிகள் தற்போது வாழும் உயிரிகளில் மாற்றங்களை உருவாக்கி அதன் மூலம் புதிய சிற்றினங்களை உருவாக்கி சுற்றுச்சூழலை பாதிக்கச் செய்ய இயலும்.<br>• புதிய அல்லது கொடிய தீங்குயிரிகள் மற்றும் நோயூக்கிகளை உருவாக்குவது. மரபணு மாற்றப்பட்ட உயிரிகளைக் கொண்டு இனக்கலப்பு செய்வதன் மூலம் வாழ்ந்து வரும் தீங்குயிரிகளின் விளைவுகளை மேலும் மோசமடையச் செய்தல்' | |
| 32 | பசுமை இல்ல விளைவு இல்லாத பூமி<br>பசுமை இல்ல விளைவு இல்லாவிட்டால், கடல்கள் உட்பட புவி முழுவதுமாக உறைந்து விடும். அதனால் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. தட்பவெப்பநிலை மாற்றங்கள் மற்றும் பருவ காலங்கள் இருக்காது. | 3 |
| 33 | தைமஸ் செயல் குழந்தைகளில் நலிவுறுதல் விளைவுகள்<br>1. 'T' லிம்போசைட்டுகள் முதிர்ச்சி பாதிக்கப்படும்.<br>2. இதனால் செல்வழி நோய்த்தடைகாப்பு நடைபெறுவதில்லை<br>3. பல்வேறு நோய்க்கிருமிகளும், தடைக்காப்பு மண்டல தொடர்பான நோய்களுக்கும் இக்குழந்தை ஆளாகும். | 3 |

<u>பகுதி– IV</u>

<u>அனைத்து வினாக்களுக்கு விடையளி</u> 5x5=25

| | | |
|---|---|---|
| 34 (அ) | ஆக்ஸிடோசின்<br>• கர்ப்பக்காலம் முழுமையுமே அவ்வப்போது இலேசான மற்றும் வலிமையான சுருக்கங்களை கருப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது. இச்சுருக்கங்கள் "பிராக்ஸ்டர் ஹிக்ஸ்" சுருக்கங்கள் (Braxter-Hicks Contractions) ஆகும். இச்சுருக்கங்கள் பொய்யான பிரசவவலியை ஏற்படுத்துகின்றன.<br>• கருவளரவளர ஈஸ்ட்ரோஜனின் அளவு அதிகரித்து கருப்பைச் சுருக்கங்களையும் அதிகப்படுத்துகிறது.<br>• இச்சுருக்கங்கள் கரு உருப்பெறவும் கரு கீழ்நோக்கி இடம்பெயரவும் உதவுகிறது.<br>• இந்த இடப்பெயர்ச்சியின் காரணமாக கருப்பை வாய் மற்றும் கலவிக்கால்வாய் ஆகியவை விரிவடைவதன் விளைவாக "நியூரோஹியூமோரல் அனிச்சைச் செயல்" (Neurohumoral reflex) நடைபெறுகிறது. இந்த அனிச்சைச்செயல் "கரு வெளித்தள்ளல் | 3 |

| | | |
|---|---|---|
| | அனிச்சைச் செயல் (Foetal ejection reflex) அல்லது "ஃபெர்குஸன் அனிச்சைச் செயல்" (Fergusan reflex).<br>• இந்த அனிச்சைச் செயலின் விளைவால் நியூரோஹைபோஃபைசிஸ் உற்பத்தி செய்யும் ஹார்மோனான ஆக்ஸிடோசின் கருப்பையில் ஆற்றல் மிகுந்த சுருக்கங்களை உருவாக்கி பிறப்பு வழியின் வழியாக குழந்தை வெளியேறும் நிகழ்வை நிறைவு செய்கிறது.<br>• மேற்குறிப்பிட்ட இந்நிகழ்வுகள் அனைத்தும் சேர்த்து "மகப்பேறு" அல்லது "குழந்தை பிறப்பு" எனப்படுகிறது.<br>• பால் சுரப்பியின் மீச்சிறு கதுப்புகளிலிருந்து விசையுடன் பாலை வெளித்தள்ளள ஆக்ஸிடோசின் உதவுகிறது. இது நிர்பந்த அனிச்சை செயல் (Letdownreflex) எனப்படும்.<br><u>ரிலாக்ஸின்</u><br>• ரிலாக்ஸின் எனும் ஹார்மோன் தாய்சேய் இணைப்புத்திசுவால் சுரக்கப்படுகிறது. இது கார்பஸ் லூட்டியத்திலும் காணப்படுகிறது.<br>• இடுப்பு எலும்பு மூட்டுகளைத் தளர்வடையச்செய்து கருப்பை வாய்ப் பகுதியை வலிமையான சுருக்கங்களால் விரிவடையச் செய்த குழந்தை பிறத்தலை எளிதாக்கும் ஹார்மோன் ரிலாக்ஸின் ஆகும்.<br>• பனிக்குடம் (ஆம்னியான் உறை) உடைந்து கலவிக் கால்வாய் வழியாக பனிக்குட திரவ வெளியேற்றத்தைத் தொடர்ந்து குழந்தை பிறப்பு நிகழ்கிறது.<br>• தாய்சேய் இணைப்புத்திசு தொப்புள் கொடியின் எச்சங்கள் போன்றவை (After birth) குழந்தை பிறந்த பின் வெளித்தள்ளளப்படுகின்றன. | 2 |
| 34 (ஆ) | மலட்டுத்தன்மை – வரையறை<br>• தடையற்ற பாலிய இணை வாழ்விற்குப் பிறகும் கருவுற இயலாமை அல்லது குழந்தையை உருவாக்க இயலாமை மலட்டுத்தன்மை எனப்படும்.<br>(ஏதேனும் நான்கு காரணங்கள்) | 1<br>4 |
| 35 (அ) | மனிதனில் காணப்படும் பால்குரோமோமின் இயல்பு மாற்றம்<br>• மறைமுகப்பிரிவு அல்லது குன்றல் பிரிவின் போது குரோமோசோம்கள் சரிவர பிரிந்து ஒதுங்காததால் பால் குரோமோசோம் குறைபாட்டு நோய்கள் உண்டாகின்றன.<br>• கிளைன்ஃபெல்டர் சிண்ட்ரோம் விளக்கம்<br>• டர்னர் சிண்ட்ரோம் விளக்கம் | 1<br>2<br>2 |
| 35 (ஆ) | தகவமைப்பு தகவல்<br>• டார்வினின் குருவிகள் விளக்கம்<br>• ஆஸ்திரேலிய பை பாலூட்டிகள் விளக்கம் | 1<br>2<br>2 |
| 36 (அ) | மரபணு குறியீடுகளின் பண்புகள்<br>• மரபணு குறியீடு உலகளாவியது<br>• மற்ற 8 பண்புகளுக்கு 8x½ | 1<br>4 |

| | | |
|---|---|---|
| 36 (ஆ) | யூகேரியாட்டுகள் படியெடுத்தல்–வரையறை<br>• மூன்றுவகை RNA பாலிமரேஸ் பணிகள்<br>• மரபணு பிளத்தல், காப்புறையாக்கம் வாலாக்கம்<br>• தூது RNA உருவாக்கம்<br>• படம் | 1<br>1<br>1<br>1<br>1 |
| 37 (அ) | • இயல்பு திரிவு<br>• இயல்பு மீள்வு<br>• முதன்மை இணைப்பு இழை பதப்படுத்துதல்<br>• படம் PCR -ன் படிநிலைகள் | 1 ½<br>1 ½<br>1<br>1 |
| 37 (ஆ) | 1. <u>ஆஸ்காரியாசிஸ்</u><br>• நோய்க்காரணி<br>• பரப்பும் விதம்<br>• அறிகுறிகள்<br>2. <u>யானைக்கால்புழு</u><br>• நோய்க்காரணி<br>• பரப்பும் விதம்<br>• அறிகுறிகள் | ½<br>1<br>1<br><br>½<br>1<br>1 |
| 38 (அ) | அயல்நாட்டு இனங்கள் உள்ளேற்றம் – வரையறை<br>(ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டுகள் விளக்கத்துடன்) | 1<br>4 |
| 38 (ஆ) | <u>உயிரற்ற காரணிகளுக்கான விலங்குகளின் துலங்கல்கள்</u><br>• வரையறை<br>• ஒழுங்கமைவு<br>• ஒத்தமைவு<br>• வலசைபோதல்<br>• செயலற்ற நிலை<br>○ குளிர் உறக்கம்<br>○ கோடைகால உறக்கம்<br>○ வளர்ச்சிதடை நிலை | ½<br>1<br>1<br>1<br><br>½<br>½<br>½ |